பாடம் 1

# வேதாகமம்

கப்பல் பிரயாணிகள் அனைவரும் பயந்து நடுங்கினர். கடலில் பயங்கர காற்று அடித்தபடியால் அவர்களுள் சிலர் கடலில் மூழ்கினர். அவர்கள் நஷ்டப்பட்டவர்களாய், அவர்களுள் பல விடை காண முடியா கேள்விகள் எழும்பின. தாங்கள் போவது எங்கே? இந்த பிரயாணம் எதுவரை நீடிக்கும்? தாங்கள் எப்பொழுதாகிலும் தங்கள் வீட்டை வந்தடைவார்களா?

இதுவே 1492-ல் கப்பற்தலைவன் கிறிஸ்டோபெர் கொலம்பஸிற்கு நேராய் எழும்பின கேள்விகள். இந்தியாவை காணும் படி அட்லான்டிக் மகா சமூத்திரம் வழியாக அவன் அவர்களை, மாலுமிகளின் வரை படமின்றி கொண்டு வந்த வருகையாகும். அனால்அவர்கள் அமெரிக்காவை அடுத்துள்ள சில தீவுகளை அடைந்து தாகத்திற்கு தேவையான தண்ணீரை பருகி தங்கள் ஜீவனை காத்து கொண்டனர்.

இதை போன்ற ஒரு சம்பவம் இன்று சம்பவிக்காது. சரியான வரை படம் மற்றும் விஞ்ஞான கருவிகளை வைத்து கப்பற்தலைவர் தாங்கள் சேர வேண்டிய இடத்தை அடைவர்.

ஆனால் இன்று கரையில் உள்ள அனேகர், கடலின் அலைகளால் அடிக்கப் பட்டவர்சள் போன்று காணப்படுகின்றனர். அவர்கள் தங்களுக்குள்ளே பல கேள்விகளை கேட்கின்றனர். நான் எங்கு செல்கிறேன்? நான் நஷ்டபட்டவனாய் காணப் படுகின்றேனா? நான் எப்பொழுதாகிலும் சரியான பாதையை கண்டு கொள்வேனா? இதை போன்ற நமது எல்லா கேள்விகளையும் தேவன் அறிந்து, நம்மை சரியான பாதையில் நடத்தும் படியாக தேவன்நமக்கு ஒரு புத்தகத்தை தந்துள்ளார்.

விடைகளை ஆராய்வதற்கு முன் நாம் ஒருமித்து அப்புத்தகத்தை சற்று பார்ப்போம். அது எவ்வாறு எழுதபட்டது என்றும், எங்கெனம் நமக்கு அருளப்பட்டது என்றும் சற்று பார்ப்போம்.

## இந்த பாடத்தில் நீங்கள் படிப்பது ........

வேதாகமத்தின் ஆரம்பமும், அமைப்பும்.
வேதாகமத்தின் நோக்கம்.

## இந்த பாடம் உங்களுக்கு ........

* வேதாகமத்தின் ஆரம்பத்தையும், அமைப்பையும் விளக்கி காட்டும்.
* வேதாகமம் எவ்வாறு, எதற்காக அருளப்பட்டது என்பதை அறியச் செய்யும்.

## வேதாகமத்தின் ஆரம்பமும் அமைப்பும்.

நோக்கம் 1. வேதாகமத்தின் ஆரம்பத்தையும் அடிப்டை அமைப்பையும் விளக்குதல்.

66 புத்தகங்களை கொண்டுள்ள பரிசுத்த வேதாகமம், தேவன் நமக்கு தந்தருளிய ஒர் சிறிய நூல் நிலையமாகும். அதன் முதல் பாகமாகிய - பழைய ஏற்பாடு 39 புத்தகங்களை கொண்டுள்ளது. இரண்டாம் பாகம் - புதிய ஏற்பாடு – 27 புத்தகங்களை கொண்டுள்ளது.

1600 வருடங்களுள் சுமார் 40 மனிதர்கள் இப்புத்தகங்களை எழுதுவதில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் பரிசுத்த வாழ்க்கை நடத்தின தேவமனிதர்கள் என வேதாகமம் கூறுகிறது. அவர்கள் சிலர் இராஜாக்கள் , உழவர்கள்' கவிஞர்கள், வியாபாரிகள், இராணுவர் மற்றும் மதத்தலைவர்களாகவும் காணப்பட்டனர். அவர்கள் வித்தியாசமான

குடும்ப பாரம்பரியமுடையவர்களாகவும், பல பட்டண வாசிகளாகவும், பல விருப்பங்களையுடையவர்களாகவும் காணப்பட்டனர்.

சரித்திரம், தீர்க்கதரிசனம் மற்றும் கவிதை போன்ற பல விஷயங்கள் வேதாகமத்தினுள் அடங்கியுள்ளது. அதனுள் சங்கீதங்களும், நீதிமொழிகளும் அடங்கியுள்ளது. சிறியோர் பெரியோர் யாவருக்கும் உற்சாகமளிக்கும் கதைகளும் அதனுள் அடங்கியுள்ளது. ஆயினும் இவை அனைத்தும் ஒரே மையப் பொருளை கொண்டுள்ளது. அதுவே – தேவனுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள உறவு.

## நீங்கள் செய்ய வேண்டியது

நீங்கள் செய்ய வேண்டியது என்னுமிடத்தில் காணப்படும் கேள்விகள், நீங்கள் படித்தவைகளை மீண்டும் ஞாபகத்திற்கு கொண்டு வரவும். அவைகளை அனுதின வாழ்க்கையில் கடைபிடிக்கவும் உதவி செய்யும்.

1. கோடிட்ட இடங்களை பூர்த்தி செய்யவும்.

a. பல குடும்ப பாரம்பரியமுள்ள.................................

மனிதர்களால் எழுதப்பட்ட வேதாகமம்......... ....
புத்தகங்களை கொண்டுள்ளது.

b. வேதாகமம்............. வருடங்களுள் எழுதப்பட்டது.

c. முதலாம் பாகமாகிய........................ ஏற்பாட்டில்

..................புத்தகங்களும்
இரண்டாம் பாகமாகிய .............. ஏற்பாட்டில்
..................புத்தகங்களும் அடங்கியுள்ளது.

கடைசி பாகத்தில் கொடுக்கப்பட்டுள்ள விடையோடு உங்கள் விடைகளை ஒப்பிட்டு பார்க்கவும்.

நோக்கம் 2. தெய்வீக ஏவுதலின் நிலையை அங்கீகரித்தல்

முதல் பாகத்தில் நீங்கள் ஓர் குழப்பத்தை கவனித்திருக்கலாம். அங்கு நாம் காண்பதென்னவெனில் வேதாகமத்தை தேவன் தாமே அருளினர் என்றும் மேலும், மனிதர்கள் அவைகளை எழுதினர் என்றும் பார்க்கிறோம். இது எங்கனமாகும்?

வேதாகமத்தை எழுதின நாற்பது மனிதர்களும் தேவனால் ஏவப்பட்டனர் இதன் பொருள் யாதெனில், தாங்கள் எதை எழுத வேண்டுமென தேவன் விரும்பினரே அவைகளை பரிசுத்தாவியானவர் அவர்கள் மூலம் எழுதச் செய்தார். II தீமொத்தேயு 3:16- ல்''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது'' என நாம் பார்க்கிறோம். மேலும் வேதாகமம் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பிக்குதலுக்கும் கொடுக்கப்பட்டது என நாம் காண்கிறோம்.

நமது சிறந்த நன்மையை தேவன் விரும்புகிறபடியால், நாம் நன் முறையில் வாழ தேவையான உபதேசங்களைஅவர் நமக்கு அளித்துள்ளார். நாம் அவருடைய நியமத்தின் படி நடக்காவிட்டால் நாம் நம்மை தாமே தண்டிக்கிறவர்களாயிருப்போம் என்பதை அவர் அறிவார். நமது மனதும், சரீரமும் விசேஷமாக ஆத்துமாவும் துன்பம் அனுபவிக்கும். இதனை தவிர்க்க கூடிய சிறந்த முறை, அவருடைய வசனத்தின் படி நடத்தலாகும். அதன் மூலம் அவரை தனிப்பட்ட முறையில் அறிய கூடும். அவருடைய வழிகள் நாம் பின்பற்ற சிறந்தது என்பதை நாம் அறிவோம்.

நம் வாழ்க்கையில் நமக்கு உதவி செய்யவும், நமக்கு தேவையான பெலனை அளிக்கவுமே வேதாகமம் எழுதப்பட்டது. எப்பொழுதும் நம் வாழ்க்கையில் அவருடைய

தனிப்பட்ட உபதேசங்களை அறிந்து கொள்வது எத்தனை ஆச்சிரியமான காரியம் ?

## நீங்கள் செய்ய வேண்டியது

சரியான விடையின் முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும்.

2. வேதாகமம் தெய்வீக ஏவுதல் என்கையில், அதை நாம் புரிந்து கொள்வது?

   a) அது தேவனை பற்றி கூறுவதாக.
   b) தேவன் தாமே அதை எழுதினவர்களுக்கு எதை எழுத வேண்டும் என உரைத்ததாக.
   c) அதனுள் விலையேறப் பெற்ற மத சம்பந்தமான சரித்திரம் அடங்கியுள்ளதாக

3. எழுத்தாளர்கள் அனைவரும் ஒரே விஷயத்தை எழுதின போதிலும் அவர்கள் எழுதினவைகள் ஒன்றோடொன்று முரண்படாததின் காரணம்

   a) தேவன் தாமே உண்மை ஆசிரியராயிருந்து தமது ஆலோசனைகளை எழுத்தாளருக்கு கொடுத்தார்.
   b) பின் தொடர்ந்து வருபவர்களுக்கென ஒவ்வொரு வரும் தங்கள் ஆலோசனைகளை வைத்து போயினர்.

4. தேவன் வேதாகமத்தை அளித்ததின் உண்மை காரணத்தின் முன் காணப்படும் எழுத்தை சுற்றி வட்டமிடவும்.

   a) நமது சிறந்த நன்மையை அவர் விரும்பினபடியால்
   b) சரியான வாழ்க்கை நடத்த தேவையான உபதேசங்களை நமக்கு தர விரும்பினபடியால்.
   c) அவர் நமது அறிவுக்கெட்டாதவர் எனநாம் அறிந்து கொள்ளும்படியாக.
   d) அவர் நம்மோடு ஐக்கியம் கொண்டு அவர் எப்படி பட்டவர் என்பதை சொல்ல விரும்பினபடியால்.